1987 ஏப்ரல் 10]

பெரியார் மாவட்டம், சித்தோட்டில் போக்குவரத்துத் துறை பொறியியல் கல்லூரி.

373—(*வினா எண் 10423) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சித்தோட்டில் சுமார் ரூபாய் 6 கோடி செலவில் 350 ஏக்கர் நிலப்பரப்பில் போக்குவரத்துத்துறை சம்பந்தப்பட்ட பொறியியல் கல்லூரி கட்டப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்பொழுது முடியும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) எல்லா வேலைகளும் பூர்வாங்கமாக 1989 ஆம் ஆண்டுக்குள் முடியலாம்.

தென்னை நார்ப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி.

374—(*வினா எண் 10308) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை நாரிலிருந்து தயாரிக்கப்படும் கார்பெட், கால்மிதியடிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அரசுக்கு கிடைக்கும் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை நாரிலிருந்து தயாரிக்கப்படுகிற கார்பெட் மற்றும் மிதியடிகள் போன்ற பொருட்கள் வெளிநாடுகளில் அதிகமாக விரும்பி ஏற்கப்படுவதாகத் தகவல் வருகிறது. அப்படியானால் அதற்கு அரசாங்கம் முயற்சித்து பல்வேறு இடங்களில் இதைத் துவக்க இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஏற்றுமதி செய்கிற அளவுக்கு இன்னும் செயல்படுத்த வில்லை. உற்பத்தியைப் பெருக்கவில்லை என்று கருதுகிறேன் அதுபற்றி தனியாக ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

சென்னை-விழுப்புரம் இரட்டை இரயில் பாதைத் திட்டம்.

375—(வினா எண் 12160)* **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-விழுப்புரம் இரட்டை இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை விரைவில் துவங்கிட, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி இவ்வரசு மத்திய அரசை அவ்வப் போது வற்புறுத்தி வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற இரட்டை இரயில் பாதைத் திட்டங்கள் எத்தனை இடங்களில் தமிழகத்தில் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசினிடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், இந்தப் பணிகள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு விட்டதா அல்லது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரங் களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, குறுகிய இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டுமென்றும், இன்னும் பல வழிகளை அமைக்க வேண்டு மென்றும் நாம் பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அந்தப் பட்டியல் இப்போது என்னிடத்தில் இல்லை. சென்னையிலிருந்து விழுப்புரம் விரையில் பலவழிப்பாதை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையில்